# பணியிடத்தில் பெண்கள் மீதான
# பாலியல் துன்புறுத்தல்
# (தடுப்பு, தடை, நிவர்த்தி)
# சட்டம் 2013



## மாணவிகளுக்கான கையேடு


செயல்வடிவம் : A.S. குமரி, தலைவர்,

**தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்**

எழுத்து வடிவம் : ப.நிர்மலா ராணி, வழக்குரைஞர்





தயாரிப்பு ஒருங்கிணைப்பு :: எஸ்.கவிவர்மன். 94434 20448

வடிவமைப்பு :: வெ.தண்டபாணி, கோவை. 95 66 37 11 64 | அச்சு :: நவீன் பிரிண்டோகிராப்ஸ், சிவகாசி. 94420 57655

## பதிப்புரை



தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம், பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் / வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கான உரிய அதிகாரங்களைப் பெற்ற சட்ட ரீதியான அமைப்பாகும்.

கடந்த பல வருடங்களாக இயங்காமல் இருந்த இந்த ஆணையம் 2021இல் திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்த பிறகு மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் புனரமைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, சமூகத்தில் பல்வேறுவிதமான பிரச்சனைகளை எதிர் கொள்ளும் பெண்கள், நூற்றுக்கணக்கில் தற்போது ஆணையத்தை நாடி உதவி பெறுகிறார்கள்.

ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ்நாடு அரசு, பெண்கள் கல்வி கற்பதற்கு ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தி வருகிறது. இருந்தபோதும் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் மாணவிகளும், பெண் ஆசிரியர்களும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் புகார்கள் ஆணையத்தின் கவனத்திற்கு வருகிறது. இதில் ஆணையம் தொடர் கவனம் செலுத்தி வருகிறது.

இந்நிலையில் பெண்களுக்கான சட்டங்களை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் எளிமையான கையேடுகளையும், சுவரொட்டி களையும் தயாரிக்க ஆணையம் முடிவு செய்துள்ளது.

அதன் முதற்கட்டமாக, பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை, நிவர்த்தி) சட்டம் 2013 குறித்த மாணவிகளுக்கான கையேடும், சுவரொட்டியும் வெளியிடப்படுகிறது.

கையேட்டிற்கு எழுத்து வடிவம் கொடுத்த வழக்குரைஞர் U.நிர்மலாராணி அவர்களுக்கும் சுவரொட்டிக்கு கலை வடிவம் கொடுத்த G.வெங்கட் ராம் (Visual Artist, சென்னை) அவர்களுக்கும் ஆணையம் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது.

பெண்கள் மீதான வன்முறை அற்ற தமிழகத்தை படைப்பதற்கான முயற்சியில் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் துணை நிற்கும் என்பதை இங்கு பதிவு செய்கிறேன்.

**A.S.குமரி**
**தலைவர்**
**தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்**
Email id : chairscwtn@yahoo.co.in
Contact no : 044 - 28551155, 044 - 28592750

## அணிந்துரை



பாலியல் சீண்டல்கள் / தொல்லைகளிலிருந்து பாதுகாத்துக்கொள்வது எப்படி என்பதற்கான மாணவிகளுக்கோர் கையேடு இச்சிறிய நூல். பணியிடங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் தொல்லைகளிலிருந்து விடுபடுவதற்கான நெறிகாட்டு வழிமுறை மற்றும் அதற்கான விசாரணைக் குழு அமைப்பு, குற்றம் இழைத்தோருக்கான தண்டனை பற்றி உச்சநீதிமன்றம் ஒரு சட்டத்தொகுப்பை வழங்கியது.

2013-ம் வருடம் நாடாளுமன்றம், பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை, நிவர்த்தி) சட்டத்தை இயற்றியது. ஒவ்வொரு நிர்வாகமும் இச்சட்டத்தைப் பற்றிய குறிப்பை பணியிடங்களில் வெளியிட வேண்டுமென்றும், விழிப்புணர்வை ஊழியர்களிடம் உண்டாக்க வேண்டும் என்றும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பிரிவு 19)

ஆனால், பத்து வருடங்கள் ஆனபின்னரும் இதுபற்றிய சரியான புரிந்துணர்வு உருவாக்கப்படவில்லை என்பதே உண்மை. அது தவிர, பணியிடங்களில் பாலியல் சீண்டல்களில் ஆரம்பித்து பாலியல் வன்கொடுமை வரை தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது. மாணவிகளுக்கு இது குறித்து சரியான புரிதலை ஏற்படுத்தினால் அது நல்ல பயனைத் தரும் என்ற அடிப்படையில்தான் இக்கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் பிரிவுகளைப் புரிந்து கொள்வது கடினமாக இருப்பினும், அதை எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் இக்கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. சட்டக் கடமையை நிறைவேற்றுவதுடன், பல்லாயிரக்கணக்கான மாணவிகளுக்கு சட்டத்தின் புரிந்துணர்வை இக்கையேடு ஏற்படுத்தும் என்பது உறுதி.

தேதி : 22.7.2023

**கே.சந்துரு**

**மேனாள் நீதிபதி**

# முகவுரை



சாமானியர்களையும் சட்டம் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் "பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை, நிவர்த்தி) சட்டம் 2013" குறித்த மாணவிகளுக்கான கையேட்டை வெளியிடுகிற தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திற்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த முயற்சியில் கையேட்டிற்கு எழுத்து வடிவம் கொடுக்கும் பணியை என்னிடம் ஒப்படைத்த ஆணையத் தலைவர் ஏ.எஸ்.குமரி அவர்களுக்கு என்னுடைய நன்றியை உரித்தாக்குகிறேன்.

பெண்கள் தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை வெளியில் சொன்னாலே அவமானம் என்ற சமூக கற்பிதம் காலம் காலமாக மக்கள் மனதில் வேரூன்றி இருக்கின்றது. இதனால்தான் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை /வன்முறைகளை பெண்கள் வெளியில் சொல்ல முன் வருவதில்லை.

பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் மாணவிகள் இந்த சட்டப்படி, உள்புகார் குழுக்களின் மூலமாக தீர்வு காணலாம். விரும்பினால் காவல்துறை மூலமாக குற்ற நடவடிக்கை எடுக்கலாம், இதற்கு உதவுவது நிர்வாகத்தின் கடமை. இதில் நடைமுறை சிக்கல்கள் ஏற்பட்டால், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தை நாடலாம்.

மாணவ சமுதாயம் மௌனத்தை கலைத்து அநீதியை எதிர்க்க, இந்த கையேடு ஒரு நல்ல ஆயுதமாக பயன்படும் என்று நம்புகிறேன்.

**ப.நிர்மலா ராணி**
**வழக்குரைஞர்**
e-mail : unirmalarani@gmail.com

# பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை, நிவர்த்தி) சட்டம் 2013

## சட்டம் உருவான வரலாறு



ராஜஸ்தானைச் சேர்ந்த பன்வாரி தேவி, மாநில அரசால் உருவாக்கப்பட்ட பெண்கள் மேம்பாட்டு திட்டத்தில் ஒரு பணியாளர். ராஜஸ்தான் மாநிலத்தில் அட்சய திருதியை விழாவின் போது, ஆயிரக்கணக்கில் குழந்தை திருமணங்கள் நடைபெறும். குழந்தை திருமணம் நடந்தால் காவல்துறை உதவியுடன் அதை தடுத்து நிறுத்த மாநில அரசு பன்வாரி தேவி உள்ளிட்ட நூற்றுக்கணக்கான பணியாளர்களுக்கு உத்தரவிட்டது.

ஆதிக்க சாதியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் ஒன்பது மாத பெண் குழந்தைக்கும் ஒரு வயது ஆண் குழந்தைக்கும் நடக்கவிருந்த குழந்தைத் திருமணத்தை காவல்துறை உதவியுடன் பன்வாரி தேவி தடுத்து நிறுத்தினார். இதனால் ஆத்திரமடைந்த ஐவர், பட்டப் பகலில் பன்வாரி தேவியை கூட்டு பலாத்காரம் செய்தனர்.



THE TIMES OF INDIA

NEWS INDIA EXPLAINERS VIDEOS CITY WO TOI+

Instant Gold Loans from Rs 500 to 5 Cr

MUTHOOT FINANCE KNOW MORE

TRENDING Parliament Monsoon Session PM Modi Rajasthan

THIS STORY IS FROM MAY 4, 2014

**Rajasthan govt issues advisory against child marriage**


TNN / UPDATED: MAY 4, 2014, 04:50 IST

JAIPUR: The directorate of child rights (DCR) has made it clear that the government machinery in districts should remain attentive not only during Akha Teej but also throughout the year to prevent child marriages.

OPEN IN APP

தனக்கு நேர்ந்த கொடுமைக்கு புகார் பதிவு செய்யவே காவல்துறையுடன் அவர் கடுமையான போராட்டத்தை நடத்த வேண்டி இருந்தது. புகார் கொடுத்ததால், ஆதிக்க ஜாதியினர் நிறைந்த அந்தக் கிராமம் பன்வாரி தேவி குடும்பத்தை ஊரை விட்டு தள்ளி வைத்தனர். ஆனாலும் பன்வாரி தேவி தனது ஊரைவிட்டு வெளியேராமல் அங்கேயே இருந்து போராடினார்.





நீதிபதி J.S. வர்மா

இதற்கிடையில் பன்வாரி தேவி தனது பணியை செய்ய முற்படும்போதுதான் பாலியல் ரீதியாக தாக்கப்பட்டார் என்பதை அடிப்படையாக வைத்து விசாகா உள்ளிட்ட ஐந்து அமைப்புகள் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தனர்.

முதன்முறையாக பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல் என்பது ஒரு குற்றம் என்றும், அது பெண்கள் பணி செய்யும் அடிப்படை உரிமையை பாதிக்கிறது என்றும், இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி J.S. வர்மா தலைமையிலான அமர்வு வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியது. **(Vishaka & others Vs State of Rajasthan & others, 1997)**. சட்டம் இயற்றும் வரை பாதிக்கப்பட்ட பெண் புகார் கொடுப்பதற்கு ஏதுவாக வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டது. பெண்கள் வேலை செய்யும் பணியிடங்களில் உள் புகார் குழு அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

2013-ல் பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை, நிவர்த்தி) சட்டம் இயற்றப்பட்டது. அந்த சட்டம், பணியிடம் மற்றும் பாலியல் துன்புறுத்தல் என்றால் என்ன; உள்புகார் குழுக்கள் எப்படி அமைக்கப்பட வேண்டும்; எப்படி செயல்பட வேண்டும், நிர்வாகத்தின் கடமை என்ன என்பதை விரிவாக விளக்குகிறது.




**"என்னுடைய
இறுதி மூச்சு உள்ளவரை
நீதிக்காக போராடுவேன்.
குற்றவாளிகளுக்கு
தண்டனை கிடைக்கும் வரை
ஓயமாட்டேன்."**

பன்வாரி தேவி

## எது பாலியல் துன்புறுத்தல்?

பாலியல் துன்புறுத்தல் என்பது விரும்பத்தகாத, பாலியல் ரீதியான, நேரடியான / மறைமுகமான நடத்தைகள் அல்லது வாய் மொழிகளை உள்ளடக்கியதாகும்.

**(i) உடல் ரீதியான தொடர்பு மற்றும் அதற்கான முயற்சிகள் செய்வது**
**(ii) பாலியல் ரீதியான கோரிக்கைகளை நிறைவேற்ற கட்டாயப் படுத்துதல்;**
**(iii) பாலியல் ரீதியான கருத்துக்களை பேசுவது; அலைபேசி மூலம் குறுஞ்செய்திகள் அனுப்புவது; இரட்டை அர்த்தங்களுடன் கூடிய சினிமா பாட்டுகளை முணுமுணுப்பது.**
**(iv) ஆபாச படங்கள் / வீடியோக்கள் கண்பிப்பது.**
**(v) பெண்ணுடைய நடத்தை சம்பந்தமாக பேசுவது, வதந்திகளை பரப்புவது**
**(vi) வேறு எந்த விரும்பத்தகாத உடல் ரீதியான, வாய்மொழி அல்லது வாய்மொழி அல்லாத பாலியல் ரீதியான நடத்தை.**

இது போன்ற பாலியல் துன்புறுத்தல் நடக்கும் போது அந்த பெண்ணிடம் தன்னுடைய பாலியல் தேவையை பூர்த்தி செய்தால் மட்டுமே அவளுக்கு பணியிடத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என்று உறுதி வழங்குவதோ, தனக்கு உடன்படாவிட்டால் பின்னடைவை சந்திக்க நேரிடும் என்று மிரட்டுவதோ வேலை செய்ய முடியாத ஒரு எதிர்மறை / விரோதமான பணிச் சூழலை உருவாக்குவதோ குற்றமாகும்.

பாலியல் துன்புறுத்தலை தடுப்பதற்கு முதல் படி
அதை அடையாளம் காண்பது!
ஒரு செய்கை எந்த விதமான உணர்வுகளை
உள்ளுக்குள் ஏற்படுத்துகிறது என்பதை பொறுத்துதான்
பாலியல் துன்புறுத்தலை அடையாளம் காண முடியும்.

| விரும்ப தகாத உணர்வுகள் | விரும்பத்தக்க உணர்வுகள் |
| --- | --- |
| மோசமான உணர்வு | நல்ல உணர்வு |
| ஒருதலைப் பட்சமாக | பரஸ்பரம் |
| அதிகாரம் அற்றதாக உணர்தல் | சமத்துவ உணர்வு |
| தேவையில்லாத | தேவையான |
| சட்ட விரோதமான | சட்டத்திற்கு உட்பட்ட |
| ஆக்கிரமிப்பது | வெளிப்படையான |
| இழிவு படுத்துவது | பாராட்டப்படுவது |
| கோபம் வருத்தம் | சந்தோஷம் |
| எதிர்மறையான சுயமதிப்பீடு | நேர்மறையான சுயமதிப்பீடு |

# உதாரணங்கள்

## கல்லூரிகளில்

**பெண்** : கண்ணில் எறும்பு கடித்து வீங்கி விட்டது. அதனால் ஒரு நாள் விடுமுறை வேண்டும்.

**ஆண்** : நீ ஆப்பிள் போன்று இனிப்பாக இருப்பதால் தான் எறும்பு உன்னை கடித்து விட்டது. நீ கல்லூரிக்கு விடுமுறை எடுத்தால், நான் உன்னை மிகவும் miss பண்ணுவேன்.

**ஆண்** : உன் dp கோபுரத்து சிலை மாதிரி அழகா இருக்கு. கோபுர தரிசனம் பண்ண போலாமா??

**பெண்** : ஏன் இப்படி பேசுறீங்க சார்?

நீ
ஜிம்முக்கு போறியா,
உன்னோட வயிறு,
பின் பக்கம் எல்லாம்
குறைஞ்சு இருக்கு.



நள்ளிரவில் தூக்கம்
வரவில்லை என்றால்
Whats Appஇல்
உன்னுடைய புகைப்படத்தை
பார்த்து தான் தூங்குவேன்.

என்
சப்ஜெக்ட்டில் மட்டும்
ஃபெயில்
ஆகி விடாதே. என்னால்
தாங்கவே முடியாது.

உன்னோட முகம் பார்த்து
பேச தோண மாட்டேங்குது.
ஏனென்றால் அந்த அளவுக்கு
உன் உடம்பு அழகா இருக்கு.

எத்தனை பெண்களை
வேண்டுமானாலும் என்னால்
கரெக்ட் செய்ய முடியும்.
ஆனால் உன்னைப் போன்ற
ஒரு பெண்ணிடம் எப்படி
மனதை பறி கொடுத்தேன்
என்று தெரியவில்லை.

புதுசா
துப்பட்டாவை ஒரு பக்கமா
போட்டு இருக்க!
சரி போட்டுக்க!!
உனக்கு
அங்க என்ன இருக்கு
மறைக்கிறதுக்கு.

உன்னை தான் தொட
முடியவில்லை, உன்
அலைபேசியை மட்டுமாவது
தொட்டுக்கிறேன்.

உன் பேப்பரை
திருத்தும் போது
100 மார்க் போட வேண்டும்
என்று என் கை விரும்புகிறது.

மற்றவர்களிடம் சிரிப்பதும்,
உன்னிடம் சிரிப்பதும்
ஒன்றல்ல.
ஏனென்றால்
உன்னை என் மனதில்
ஸ்பெஷல் ஆன இடத்தில்
வைத்துள்ளேன்.





## பள்ளிகளில்

நோட்டுகளில் கையெழுத்திட, மாணவிகளை தனது அறைக்குள் அழைத்துச் சென்று கட்டி அணைப்பது / தவறான முறையில் தொடுவது.

வகுப்பு நடக்கும்போது பிற மாணவர்கள் முன்னிலையில் வேண்டுமென்று மாணவிகளை குறை கூறி இழி செயல்கள் செய்வது.

மாணவிகளின் சீருடைகளை விலக்கி உள்ளாடை அணிந்திருக்கிறார்களா என தடவி பார்ப்பது.

பள்ளிகளில் பெண் குழந்தைகளை தரையை குனிந்து சுத்தம் செய்ய சொல்லி வற்புறுத்தியும், யோகா மற்றும் உடற்பயிற்சி வகுப்புகளில் அவர்களை குனிந்து உடற்பயிற்சி செய்ய சொல்லியும் தவறான கோணங்களில் பார்ப்பது.

ஜோசியம் பார்க்கிறேன் என்று கூறி கையைப் பிடித்து இழுத்து மடியில் உட்கார வைத்துக் கொள்வது.

உடல்நிலை சரியில்லாத குழந்தைகள் ஓய்வெடுக்கும் அறைக்கு வந்து காய்ச்சல் இருக்கிறதா என தவறான நோக்கத்தோடு தொட்டுப் பார்ப்பது.

மாணவிகளை வகுப்புகளில் படிக்கும் போது மார்பு தெரியுமாறு புத்தகங்களை கீழ இறக்கி வைத்து படிக்குமாறு வற்புறுத்துவது.

**சூழ்நிலை 1**

**ஷா**லு கல்லூரியில் நன்கு படிக்கும் மாணவி. இறுதி ஆண்டு படிப்பில் களப்பணிக்கு செல்ல வேண்டிய கட்டாயம்.

மாணவிகள் மட்டுமே செல்ல வேண்டிய களப்பணிக்கு, பேராசிரியர் தானும் வருவேன் என அடம்பிடித்து கட்டாயப்படுத்தி அழைக்கிறார். தன்னுடன் வரவில்லையென்றால், மதிப்பெண்ணை குறைத்து பட்டம் வாங்க விடாமல் செய்வேன் என மிரட்டினார்.
அதை மறுக்க முடியாமல், பயத்தில் அவருடன் களப்பணிக்கு ஷாலு சென்றாள்.

பேருந்தில் ஒரே இருக்கையில் ஷாலுவுடன் நெருக்கமாக தோளில் கை போட்டு பேராசிரியர் பயணித்தார்.

**இது பாலியல் துன்புறுத்தலா?**
**ஆம்.**

**சூழ்நிலை 2**

**எ**லிசா
இறுதி ஆண்டு படித்து
கொண்டிருந்தாள்.

அவள் எப்போதும்
தனது வகுப்பு நண்பர்களோடு
பேதமின்றி பேசி பழகும்
குணத்தை கொண்டவள்.
அவளது
இன்டர்னல் பரிட்சை தாள்களை
மறைத்து வைத்து விட்டு,
“உன் வகுப்பு நண்பர்களோடு
மட்டும் தான் சிரித்து பேசுவியா
என்னுடன் ஏன் பழக மறுக்கிறாய்..?”
என்கிறார் அவளது பேராசிரியர்.
“உனது தேர்வுத் தாள்கள் இல்லை,
நான் சொல்வதை கேட்டால்
அது இல்லாமலேயே
நீ தேர்வாக முடியும்.
இல்லை என்றால்
உன் கதி அவ்வளவு தான்”
என்று மிரட்டுகிறார்.

**இது பாலியல் நோக்கம் கொண்டதா?**
**ஆம்.**

## சூழ்நிலை 3

**நி**கிதா
இறுதி ஆண்டு படிக்கும் மாணவி.

ஆய்வுக்கட்டுரை பற்றி பேச வேண்டும் என்று இரவு நேரத்தில் அவளுடைய பேராசிரியர் வாட்ஸ் அப்பில் குறுஞ்செய்தி அனுப்பினார்.

ஆனால், அவர் ஆய்வு கட்டுரை பற்றி பேசாமல் கொஞ்சம் தவறாக பேசுவது போல் இருந்ததால், வீட்டில் பெற்றோர் இருக்கிறார்கள் என்றும் இதுபோன்று இரவு நேரங்களில் குறுஞ் செய்தி அனுப்பாதீர்கள் என்று நிகிதா கூறியதற்கு, “நீ என்னுடன் இரவில் வாட்ஸ் அப்பில் பேசவில்லை என்றால், உன்னை தேர்வில் தேர்ச்சி பெற விட மாட்டேன்” என்று மிரட்டினார்.

**இது பாலியல் துன்புறுத்தலா?**
**ஆம்.**

## சூழ்நிலை 4

**ஆ**தினி
ஒரு ஆற்றல் மிக்க மாணவி.

ஒரு நாள் வகுப்பு முடிக்க நேரமாகி விட்டதால் பேருந்துக்காக காத்து கொண்டு நிற்கையில், அவளுடைய பேராசிரியர் தன்னுடன் பைக்கில் வருமாறு அழைத்தார்.

ஆதினி வர மறுத்த போது, “உன்னுடைய நடத்தை சரியில்லை என நடத்தை சான்றிதழில் போட்டு விடுவேன்” என மிரட்டினார்.

வேறு வழியில்லாமல் அவருடன் பைக்கில் சென்றாள்.

**இது பாலியல் துன்புறுத்தலா?**
**ஆம்.**

**சூழ்நிலை 5**

**யு**வதி
முதலாம் ஆண்டு படிக்கும் மாணவி.

*Library card* ல் கையெழுத்திட
அவளுடைய பேராசிரியரிடம் வகுப்பில் கேட்டதற்கு
அவளை “தன்னுடைய அறைக்கு தனியாக வந்து
கையெழுத்து வாங்க வருமாறு அழைத்தார்.”

தனியாக போக யுவதி மறுத்ததற்கு,
நீ தனியாக வரவில்லை என்றால்
“நீ வேறு பையனோடு உறவில் இருக்கிறாய்
என்று பெற்றோரிடம் சொல்லி உன்
படிப்பை நிறுத்துமாறு சொல்வேன்”
என யுவதியை அச்சுறுத்தினார்.

வேறு வழியின்றி படிப்பை முடிக்காமல்
போய்விடுமோ என்ற பயத்தில் அவருடைய
அறைக்கு
கையெழுத்து வாங்க சென்றாள்.

**இது பாலியல் துன்புறுத்தலா?**
**ஆம்.**

**சூழ்நிலை 6**

**ஹ**ர்ஷா
தன் தோழிகளுடன்
ஒரு நாள்
கல்லூரிக்கு செல்லாமல்
திரைப்படத்திற்கு
சென்று விட்டார்.

எல்லோரையும் தண்டித்த
ஆசிரியர்
ஹர்ஷாவை மட்டும் தண்டிக்காமல்
காப்பாற்றுவது போல
செய்து விட்டு,
அவளிடம் சிரித்து பேசுவது,
தனியாக அழைப்பது
என்ற செயல்பாட்டில் ஈடுபட ஆரம்பித்தார்.

**இது பாலியல் தேவைக்கான உள்நோக்கம் கொண்டதா?**
**ஆம்.**

**சூழ்நிலை 7**

**ஸ்ரீ** மற்றும் தாரா
என இரண்டு ஹாஸ்டல் மாணவிகள்.

வகுப்புகள் முடிந்து வீட்டிற்கு செல்லும் போது
ஸ்ரீ மற்றும் தாராவை மட்டும் இருக்க வைத்து,
அவர்களிடம் தேவையற்ற கதைகளை பேசிக்கொண்டே
காமெடி செய்வது போல,
திருமண உறவுகள் குறித்து
இரட்டை அர்த்தத்தில் பேசுவது
அவர்களுடைய பேராசிரியரின் வழக்கம்.

இதை எதிர்த்து கேள்வி கேட்கும் இடத்தில்
அவர்கள் இல்லாததால்,
அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது நிலை.

**இது பாலியல் துன்புறுத்தலா?**
**ஆம்.**

**சூழ்நிலை 8**

**கௌ**ரி
கபடி போட்டியில்
விளையாடுவதற்காக
வேறொரு பள்ளிக்கு
தனது பள்ளியின் சார்பாக
சென்றாள்.

அங்கு இருந்த நடுவர்களில்
ஒருவர்
அவளை தனியாக அழைத்து
ஆசை வார்த்தைகள் கூறி

தனது ஆசைக்கு இணங்க வற்புறுத்தினார்.
இல்லையென்றால்,
நடைபெறும் விளையாட்டுகள் எதிலும்
விளையாட விடமாட்டேன் என்று
மிரட்டினார்.

**கௌரிக்கு நடந்தது**
**பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல்.**
**பள்ளிக்காக விளையாட சென்றதால்**
**அதுவும் பணியிடமே.**

## எது பணியிடம்?

- பெண்கள் பணிபுரியக்கூடிய அலுவலகம், பணி செய்யும் போது பணி நிமித்தமாக செல்லக்கூடிய இடங்கள்,
- தங்கும் விடுதிகள், அதற்கான போக்குவரத்து சேவைகள் (கார், பேருந்து, ரயில், விமானம்).
- அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், விளையாட்டு பயிற்சி அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகள்.

## யார் புகார் கொடுக்கலாம்?

- பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்ட எந்த பெண்ணும் புகார் கொடுக்கலாம்.
- அவர் அந்த நிறுவனத்தில் பணி புரிபவர் / கல்வி பயில்பவராக இருக்கலாம், அந்த நிறுவனத்திற்கு பணி நிமித்தமாக வந்த பெண்ணாகவும் இருக்கலாம்.
- பாதிக்கப்பட்ட பெண் உடல் மன ரீதியாக பாதிப்புக்குள்ளாகி புகார் கொடுக்க இயலாத நிலையில் இருந்தால்,


  அவரது உறவினர்,<br>
  நண்பர்,<br>
  உடன் பணிபுரிவோர்,<br>
  தேசிய மகளிர் ஆணையம்,<br>
  மாநில மகளிர் ஆணையம்,<br>
  சிறப்பு பயிற்சியாளர்கள்,<br>
  அந்தப் பெண்ணுக்கு சிகிச்சை அளிக்கும் மனநல மருத்துவர், சைக்காலஜிஸ்ட்

  மேலும் யாருக்கு இந்த சம்பவம் தெரியுமோ, அவர்கள் அந்தப் பெண்ணின் அனுமதியுடன் புகார் கொடுக்கலாம்.

# உள் புகார் குழு

**Internal Complaints Committee - ICC**

## குழு அமைக்கும் முறை



- குழுவின் தலைவர் ஒரு பெண்ணாக இருக்க வேண்டும்.

- குழுவின் உறுப்பினர்களில் 50% பெண்கள் இடம் பெற வேண்டும்.

- நிறுவனத்தில் பணிபுரியும் குழு உறுப்பினர்களில் இருவர் இடம் பெறலாம். இவர்கள் பெண்கள் முன்னேற்றத்தில் சமூகப் பணியில் ஆர்வம் உள்ள அடிப்படை சட்ட அறிவு கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

- குழுவில் ஒரு உறுப்பினர் பெண்கள் முன்னேற்றத்திற்காக செயல்படக்கூடிய அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதியாகவோ அல்லது பாலியல் துன்புறுத்தல் பிரச்சனைகளில் தலையீடு செய்த அனுபவம் உள்ள தனிநபராகவோ இருக்க வேண்டும்.

சில சமயங்களில் குற்றம் சாட்டப்பட்டவர் குழு உறுப்பினர்களை விட உயர் பொறுப்பில் இருந்தால் அந்த புகாரை அந்த குழு விசாரிக்க முடியாது. அவருக்கும் மேல் பணி புரியக்கூடிய உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு புகார் விசாரிக்கப்பட வேண்டும். எனவே தான் ஒரு நிறுவனத்திற்கு ஒரு குழு என்பதை விட அந்த நிறுவனத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர்கள், பதவிகள், அலைபேசி எண், e mail id ஆகிய தகவல்களை நிறுவனத்தில் எல்லோரும் பார்க்க கூடிய முக்கியமான இடங்களில் காட்சிப்படுத்த வேண்டும். நிறுவனத்தின் இணையதளத்திலும் இது வெளியிடப்பட வேண்டும்.

## புகார் கொடுப்பதற்கான கால வரையறை

- **ச**ம்பவம் நடந்து 90 தினங்களுக்குள் பாதிக்கப்பட்டவர் புகார் கொடுக்க வேண்டும்.

- தொடர்ச்சியான பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகி இருந்தால் கடைசியாக நடந்த சம்பவத்திலிருந்து 90 நாட்களுக்குள் புகார் கொடுக்கலாம்.

- சில சூழ்நிலைக் காரணங்களால் குறிப்பிட்ட கால வரையறைக்குள் புகார் கொடுக்க இயலவில்லை என்றாலோ, அந்தப் பெண் புகார் கொடுப்பதை தடுக்கும் சூழ்நிலைகள் இருந்தாலோ, குழு அதை ஆராய்ந்து காரணம் நியாயமாக இருக்கும் பட்சத்தில், அதை எழுத்துப்பூர்வமாக பதிவு செய்து 90 நாள் கால வரையறையில் இருந்து விலக்கு அளிக்கலாம்.

**உள் புகார் குழுவிற்கு ஒரு சிவில் நீதிமன்றத்தின் அதிகாரம் உள்ளது.**

**இதன் அடிப்படையில் சாட்சிகளை வரவழைப்பது ஆவணங்களை நிர்வாகத்திடமிருந்து பெறுவது போன்ற நடவடிக்கைகளை எடுக்க முடியும்.**

## புகார் தயாரிக்கும் முறை

எழுத்து பூர்வமான புகாரில்,

- பாதிக்கப்பட்டவரின் பெயர்,
- முகவரி,
- வேலை செய்யும் இடத்தில் அவருடைய பதவி,
- சம்பவம் நடந்த விதம்,
- தேதி அல்லது காலகட்டம்,
- நேரம்,
- இடம்,
- எதிர்மனுதாரரின் பெயர்,
- பதவி,
- பாதிக்கப்பட்டவருக்கும் எதிர்மனுதாரருக்கும் பணியிடத்தில் பணி ரீதியாக உள்ள தொடர்பு,

ஆகிய தகவல்கள் இடம்பெற வேண்டும்.

மேலும் சம்பவத்தை நிரூபிக்கும் விதத்தில் ஆவணங்களோ சாட்சியங்களோ இருந்தால் அதற்கான பட்டியலை இணைக்க வேண்டும்.

**புகார் கிடைத்தவுடன் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு விசாரணை குறித்த நடைமுறைகளை விளக்க வேண்டும்.**




பணியிடத்தில் தனக்கு நடக்கும்
பாலியல் துன்புறுத்தலை
அந்த பெண்ணால் மட்டுமே உணர முடியும்.

இந்த ஆணாதிக்க சமுதாயத்தில்
ஆண்கள் பாலியல் துன்புறுத்தலை
ஒரு தீங்கற்ற சமூக உரையாடலாகவோ
பொழுதுபோக்கான விஷயமாகவோதான்
பார்ப்பார்கள்.

இதற்கு ஆட்சேபனை செய்யும் பெண்களை
ஒன்றும் இல்லாத விஷயங்களை
பேரிது படுத்துபவர்களாக கூறுவார்கள்.

எனவே
இது போன்ற வழக்குகளில்
பாதிக்கப்பட்ட பெண்ணின்
மன உணர்வின் அடிப்படையில் தான்
துன்புறுத்தல் என்பதை ஆராய முடியும்.

டெல்லி உயர்நீதிமன்றம்
[Dr.Punita K.Sodhi Vs U.O.I. & Ors W.P. (c) No.:367/2009]

## புகார் அனுப்பும் முறை

- பாதிக்கப்பட்ட பெண் தனது புகாரை விரைவுத்தபால் மூலமாகவோ, இமெயில் மூலமாகவோ, குழுவின் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

- உள்புகார் குழு பற்றிய தகவல்கள் தெரியவில்லை என்றால் கல்லூரி நிர்வாகம் மற்றும் பல்கலைக்கழக பதிவாளருக்கு அனுப்பலாம். இதற்கென்று தனியாக புகார் பெட்டி வைக்கப்பட்டிருந்தால் அதில் புகாரை போடலாம்.

## சுமூகத் தீர்வு காண்பது பெண்ணின் விருப்பம்

- **வி**சாரணை ஆரம்பிக்கும் முன்னர் பாதிக்கப்பட்ட பெண் விரும்பினால் மட்டுமே பிரச்சனையை சுமூகமாக தீர்த்துக் கொள்ள குழு முயற்சி எடுக்கலாம்.

- பணம் கொடுத்து பிரச்சனையை தீர்ப்பதை சட்டம் அனுமதிக்கவில்லை.

- அதேபோல பாதிக்கப்பட்டவரை கட்டாயப்படுத்தி, மறைமுகமாக மிரட்டி, பணிய வைத்து புகாரை வாபஸ் வாங்க செய்வது சுமூகத் தீர்வு அல்ல.

## சமூகத் தீர்வுக்கான உதாரணங்கள்

- **பா**திக்கப்பட்ட பெண்,
குற்றம் சாட்டப்பட்டவர் தன்னிடம் எழுத்து மூலமாக
மன்னிப்பு கேட்க வேண்டும் என்று
கேட்டுக் கொண்டால்,
குற்றம் சாட்டப்பட்டவர் அதை ஒப்புக்கொண்டால்
அது சமூகத் தீர்வு.

- தான் வேலை பார்க்கும் பணியிடத்தில் இருந்து
குற்றம் சாட்டப்பட்டவரை வேறு கிளைக்கு
இடமாறுதல் செய்யக் கூறினால்
அதை குற்றம் சாட்டப்பட்டவர் ஒப்புக் கொண்டால்
அது ஒரு சமூகத் தீர்வு.

- இவ்வாறு ஏற்படும் சமூகத் தீர்வை
எழுத்து மூலமாக அறிக்கையாக நிர்வாகத்திடமும்,
மாவட்ட அலுவலரிடமும், குழு சமர்ப்பிக்க வேண்டும்.

- ஒப்புக்கொண்ட முடிவிலிருந்து
குற்றம் சாட்டப்பட்டவர் பின்வாங்கினால்
புகார் மீது குழு முறையான விசாரணையை
மேற்கொள்ளும்.

## பாதிக்கப்பட்டவருக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள்

முறையான, நேர்மையான, பாதிக்கப்பட்டவருக்கு
அச்சம் இல்லாத சூழ்நிலையில் விசாரணை
நடக்க வேண்டும் என்றால்,
சில நடவடிக்கைகளை குழு எடுக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட பெண் விருப்பத்தின் பேரில்
எழுத்துபூர்வமான கடிதம் கொடுத்தால்...

- **எதிர்மனுதாரரை பணியிடத்திலிருந்து மாறுதல் செய்யலாம்.**
- **பாதிக்கப்பட்ட பெண் விரும்பினால் அவரை இட மாற்றம் செய்யலாம்.**
- **பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு மூன்று மாதம் வரையிலும் விடுப்பு அளிக்கலாம். (இந்த விடுப்பு அவருக்கு பணியிடத்தில் வழங்கப்பட்ட பிற விடுப்புகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்.)**
- **வேறு பொருத்தமான நிவாரணம் வழங்கலாம்.**
- **புகார் கொடுத்த பிறகு விசாரணை நிலுவையில் இருக்கும் போது, பாதிக்கப்பட்டவருடைய பணி பற்றிய அறிக்கை எழுதுவது கல்லூரியாக இருக்கும்பட்சத்தில் மாணவிகளுக்கு மதிப்பெண் வழங்குவது போன்ற பொறுப்புகளில் இருந்து எதிர்மனுதாரரை விடுவிக்க வேண்டும்.**

## விசாரணை நடைமுறை

- **பா**திக்கப்பட்டவரின் புகார்
குழுவுக்கு கிடைத்த ஆறு வேலை தினங்களுக்குள்
எதிர்மனுதாரருக்கு
புகார் நகல் அளிக்கப்பட வேண்டும்.

- புகார் நகல் கிடைத்த 10 தினங்களுக்குள்
எதிர்மனுதாரர் தனது பதிலையும்,
ஆதாரங்கள், சாட்சியங்கள் இருந்தால்
அதற்கான பட்டியலையும், இணைத்து
குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

- இயற்கை விதிகளுக்கு உட்பட்டு
புகார்தாரர் எதிர்மனுதாரர் இருவருக்கும்,
தங்கள் தரப்புகளை எடுத்துரைக்கவும்,
சாட்சிகளை விசாரிக்கவும், நியாயமான வாய்ப்பு மற்றும்
கால அவகாசம் கொடுத்து
விசாரணை நடத்தப்பட வேண்டும்.

- பாதிக்கப்பட்டவரையும் எதிர்மனுதாரரையும்
தனித்தனியாக விசாரிக்க வேண்டும்.
எதிர்மனுதாரர் கூறுவதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால்,
பாதிக்கப்பட்டவரிடம் அதைக் கேட்டு
தெளிவு படுத்திக் கொள்ளலாம்.

- விசாரணையின் போது
குழு தலைவரையும் சேர்த்து குறைந்த பட்சம்
மூன்று உறுப்பினர்களாவது
கலந்து கொள்ள வேண்டும்.
புகார், குழுவுக்கு கிடைத்த நாளிலிருந்து
90 தினங்களுக்குள்
விசாரணை முடிக்கப்பட வேண்டும்.

- அதிலிருந்து பத்து தினங்களுக்குள்
அறிக்கை தயாரிக்கப்பட்டு,
நிர்வாகத்திடம் கொடுக்கப்பட வேண்டும்.
அறிக்கையின் நகலை
சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும்
அளிக்க வேண்டும்.

**பாலியல் துன்புறுத்தல் என்பது
தண்டனைக்குரிய குற்றம்**
(Sec 354 A IPC).

**பாதிக்கப்பட்ட பெண்
காவல்துறை மூலம்
குற்ற நடவடிக்கை
எடுக்க விரும்பினால்
நிர்வாகம் அவருக்கு
உதவ வேண்டும்.**

**18 வயதுக்குட்பட்ட குழந்தைகளை
பாலியல் துன்புறுத்தல் செய்தால்
குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது
போக்சோ [POCSO] சட்டம் பாயும்.**

## குழுவின் பரிந்துரை

- **வி**சாரணையில்,
  புகாரில் கூறி இருக்கும் சம்பவம்
  நிரூபிக்கப்படவில்லை என்று குழு கருதினால்,
  புகார் தள்ளுபடி செய்யப்படும்.

- நிரூபிக்கப்பட்டதாக கருதினால்
  எதிர் மனுதாரர் மீது
  என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை
  குழு பரிந்துரை செய்யும்.

## தண்டனைகள்

- **து**றை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை:
  எழுத்துப்பூர்வமான மன்னிப்பு,
  கண்டனம்,

- பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு நிறுத்தி வைப்பு,
  வேலை நீக்கம்,

- ஆற்றுப்படுத்தும் சிகிச்சைக்கு அனுப்புவது,
  சமூக சேவை செய்ய அனுப்புவது.

  - போன்றவை,

**சம்பவத்தின் தன்மையை கருத்தில் கொண்டு
அதற்கு ஏற்றார் போல்
தண்டனை பரிந்துரை செய்யப்பட வேண்டும்.**

## இழப்பீடு

- பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு
இழப்பீடு வழங்க பரிந்துரை செய்யலாம்.

- சம்பவத்தால் ஏற்பட்ட மனரீதியான,
உடல் ரீதியான பிரச்சனைகள்,
மருத்துவ சிகிச்சை மற்றும் அவருக்கு ஏற்பட்ட
பணி ரீதியான வாய்ப்பு இழப்பு,
இவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.
எதிர்மனுதாரரின் வருமானத்தையும், அந்தஸ்தையும்
மனதில் கொண்டு, இழப்பீட்டுத் தொகையை நிர்ணயம்
செய்ய வேண்டும்.

- நிர்வாகமே இழப்பீடு வழங்கிவிட்டு, அதை
எதிர்மனுதாரருடைய சம்பளத்தில் பிடித்தம் செய்யலாம்.

- அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட 60 தினங்களுக்குள்
நிர்வாகம் குழுவின் பரிந்துரைகளை
நிறைவேற்ற வேண்டும்.

## மேல்முறையீடு

- குழுவின் பரிந்துரைகள்
இரு தரப்பினரில் யாருக்கு பாதகமாக வந்திருந்தாலும்,
உத்தரவு கிடைத்த 90 நாட்களுக்குள்
மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யலாம்.

- இது அந்தந்த பணியிடத்தை பொருத்தவரையில்
நீதிமன்றத்திலோ அல்லது தீர்ப்பாயத்திலோ
மேல்முறையீடு செய்யலாம்.

## ரகசிய காப்புத்தன்மை

- **பா**திக்கப்பட்ட பெண்ணின் அடையாளம் குறித்தோ,
புகாரின் தன்மை குறித்தோ,
தகவல்களை குழு வெளியிடக்கூடாது.

- எதிர்மனுதாரர் மற்றும் சாட்சிகளை பற்றிய தகவல்கள்,
விசாரணையில் சொல்லப்படும் விஷயங்கள்,
குழுவின் பரிந்துரைகள்,
எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்,
- என எதையும் வெளியில் தெரியாமல்
பாதுகாக்க வேண்டியது குழுவின் கடமை.

- மீறினால்
அபராதம் அல்லது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## கால வரையறை

புகார் — **3 மாதங்களுக்குள்** — கடைசி சம்பவம் நிகழ்ந்த தேதியிலிருந்து

எதிர் மனுதாரருக்கு அறிவிப்பு — **7 தினங்களுக்குள்** — புகார் பதிவான தேதியிலிருந்து

விசாரணை முடிவு — **90 தினங்களுக்குள்**

அறிக்கை சமர்ப்பிப்பு — **10 தினங்களுக்குள்** — விசாரணை முடிந்த தேதியிலிருந்து

குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுதல் — **60 தினங்களுக்குள்** — அறிக்கை சமர்ப்பித்த தேதியிலிருந்து

மேல்முறையீடு — **90 தினங்களுக்குள்** — பரிந்துரை நகல் வழங்கப்பட்ட தேதியிலிருந்து

## நிர்வாகத்தின் கடமைகள்

- பாலியல் துன்புறுத்தல் இல்லாத பணிச்சூழலை உருவாக்குவது.
- உள்புகார் குழுக்கள் அமைப்பது; தவறினால் அபராதம்.
- குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பது.
- குற்றம் மற்றும் சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த நிகழ்ச்சிகள் நடத்துவது.
- ஆண்டறிக்கை அரசுக்கு சமர்ப்பிப்பது.

## அரசின் கடமை

- பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் சட்டம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை கவனிப்பது;
- சட்டம் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்வது;
- நிறுவனங்கள் அனுப்பும் ஆண்டறிக்கையை ஆய்வு செய்வது;
- அது குறித்த தகவல்களை சேகரித்து வைப்பது;
- சட்டத்தால் நியமிக்கப்பட்ட மாவட்ட அதிகாரியின் பணிகளை கண்காணிப்பது.

## ரூபன் தியோல் பஜாஜ் வழக்கு

"என்னுடன் பணி புரிபவர் கொடுத்த அலுவலக விருந்துக்கு என் கணவருடன் சென்றிருந்தேன். *X* என்பவர் பெண் விருந்தினர்கள் அமர்ந்திருந்த பகுதிக்கு வந்து அமர்ந்தார். அவர் குடித்திருந்தார். அவர் முறை தவறி நடந்து கொண்டதால், பெண்கள் அவரை விட்டு விலகி வேறு இடத்தில் அமர்ந்தார்கள். முக்கியமாக பேச வேண்டும் என்று என்னை அருகில் அழைத்தார். என்னிடம் மிக நெருக்கமாக நின்று "என்னுடன் வா" என்று விரலை நீட்டி அழைத்தார். கண்ணியமற்ற அவருடைய செயலை நான் கண்டித்தேன். மீண்டும் அதிகார தோரணையுடன் அழைத்தார். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. என் வழியை மறித்துக் கொண்டு நின்றதால், என்னால் என் இருக்கையை விட்டு எழுந்திருக்க முடியவில்லை. என் இருக்கையை பின்னால் தள்ளி எழுந்து போக முயற்சித்த போது, என் உடலின் பின் பகுதியில் தட்டினார்."

**இது பாலியல் துன்புறுத்தலா?**

ஆம்

**இது யாருக்கு நடந்தது?**

பஞ்சாபில், ரூபன் தியோல் பஜாஜ் என்ற ஐஏஎஸ் அதிகாரிக்கு நடந்தது. அவருடைய கணவரும் ஐஏஎஸ் அதிகாரி.

அலுவலக விருந்துக்காக சென்ற இடத்தில் அனைத்து உயர் அதிகாரிகள் முன்னிலையிலும் இது நடந்தது.

**இதை செய்த X யார்?**

*K.P.S. கில் என்ற பஞ்சாப் மாநிலத்தின் டிஜிபியாக இருந்த மூத்த ஐபிஎஸ் அதிகாரி.*

**8 வருடம், பஜாஜ் அவர்கள் நடத்திய கடுமையான சட்டப் போராட்டத்திற்கு பிறகு மூன்று மாத சிறை தண்டனை உறுதி செய்யப்பட்டது. அதையும் சிறையில் கழிக்காமல் வெளி உலகில் நன்னடத்தையுடன் வாழ நீதிமன்றம் வழிவகை செய்தது. அவருக்கு விதிக்கப்பட்ட 2,00,000 ரூபாய் அபராத தொகையை அவர் செலுத்திய போதும், பஜாஜ் அதை வாங்க மறுத்து விட்டார்.**

> **நீதி அமைப்பின் மேல் எனக்கு இருந்த நம்பிக்கை ஜெயித்தது. நான் புகார் கொடுத்தபோது "நாட்டு நலனை கருத்தில் கொண்டு நடந்ததை மறந்துவிடு" என்று சிலர் ஆலோசனை கூறினார்கள். நாட்டில் உள்ள மற்ற பெண்களின் நலனுக்காகத் தான் நான் போராட துணிந்தேன்.**
>
> ரூபன் தியோல் பஜாஜ்



## பாண்டிச்சேரி வழக்கு

பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்த இரு மாணவிகளை இரு மாணவர்கள், பாலியல் பலாத்காரம் செய்ய போவதாக மிரட்டியும் தரக்குறைவாகவும், ஆபாசமாகவும் பேசியதால், நிர்வாகத்திடம் புகார் கொடுத்தனர். பல்கலைக்கழக நிர்வாகமோ, குற்றம் புரிந்த மாணவர்கள் மீது மட்டுமல்லாமல், புகார் கொடுத்த மாணவிகள் மற்றும் அவர்கள் நண்பர்கள் மீதும் நடவடிக்கை எடுத்தது. பாதிக்கப்பட்ட மாணவிகளிடம் மன்னிப்பு கடிதம் கோரியது. இந்த அநீதியை எதிர்த்து, இரண்டு மாணவிகளும், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து வெற்றியும் பெற்றனர் .

“பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் வன்முறை தடுப்பு சட்டம் குறித்து மாணவ சமுதாயம் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது நிர்வாகத்தின் கடமை. ஆனால் இந்த சம்பவத்தில், பல்கலைக்கழக நிர்வாகத்திற்கே முதலில் விழிப்புணர்வு பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது. தங்களுடைய எதிர்காலத்தை பற்றி கவலைப்படாமல், அநீதியை எதிர்த்து போராடிய இரண்டு மாணவிகளும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.” - உயர்நீதிமன்ற நீதிபதி வெ. ராமசுப்பிரமணியன்.

[(Kavya & Anr Vs Chairman University Grants Commission, New Delhi) w.p. No. 11217/2014 Madras High Court.]



## உங்கள் கவனத்திற்கு

**பெண்கள்**

**வ**ன்முறை இல்லாத வாழ்க்கை வாழும் உரிமை அரசியல் சட்டம் நமக்கு வழங்கிய அடிப்படை உரிமை. பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல் என்பது பெண்ணின் கல்வி கற்கும் / பணி செய்யும் உரிமைக்கு எதிரானது. பாலியல் துன்புறுத்தலை சகித்துக் கொள்வதை விட தடுத்து நிறுத்துவது தான் தீர்வாகும்.

**பெற்றோர்கள்**

**உ**ங்கள் பெண்ணின் குறைகளை காது கொடுத்து கேட்க வேண்டும். அவர்களை நம்ப வேண்டும். பாதிக்கப்பட்டவர்களையே குறை சொல்வதை தவிர்க்க வேண்டும்.

பாலியல் துன்புறுத்தல், உங்கள் பெண்ணின் எதிர்கால வாழ்க்கையில் மன ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும். பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாவது அவமானம் அல்ல. அது ஒரு அநீதி. அந்த அநீதியை மறைப்பதை விட அதற்கு முற்றுப்புள்ளி வைக்க முயல வேண்டும்.

**சமூகம்**

**பெ**ண்களுக்கு எதிரான வன்முறைகளை எதிர்த்து பெண்கள் மட்டுமே போராடினால் போதுமா?

சுதந்திரப் போராட்ட காலத்திலிருந்து இன்று வரை பெண் விடுதலைக்காக குரல் கொடுத்த ஆண் தலைவர்கள் ஏராளம். பெண்கள் மீதான வன்முறை என்பது சமூகத்திற்கு எதிரான வன்முறையாக பார்க்கப்பட வேண்டும். உடன்படிக்கும் மாணவர்கள் - மாணவிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க துணைபுரிய வேண்டும்.

கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் களையெடுக்க முன்வர வேண்டும்.

வன்முறை இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதில் ஜனநாயகம் எண்ணம் கொண்ட அனைவரும் அணிவகுத்து நிற்க வேண்டும்.

**பெண்கள் மீதான**

**வன்முறையற்ற சமூகத்தை படைப்பது சாத்தியமே.!**

# தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் செயல்பாடுகள்

பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் சட்டங்கள் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த எண்ணற்ற நிகழ்ச்சிகளை மகளிர் ஆணையம் தமிழகமெங்கும் நடத்தி வருகிறது.

- பெண்களுக்காக உருவாக்கப்பட்ட சட்டங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதையும் ஆணையம் கண்காணிக்கிறது.
- பெண்கள் தங்கும் விடுதிகளை நேரடி ஆய்வு செய்து அவர்கள் பிரச்சனைகளை கண்டறிந்து, களைவதற்கு முயற்சி எடுக்கிறது.
- பணியிடங்களில் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகும் சமயங்களில் சம்பவ இடத்திற்கே நேரில் சென்று விசாரணை நடத்தி சட்ட ரீதியான நடவடிக்கைக்கு உதவுகிறது.
- சட்டத்தை செயல்படுத்தும் அரசு அதிகாரிகளுடன் அடிக்கடி கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தி நடவடிக்கைகளை முறைப்படுத்துகிறது.
- அதிக எண்ணிக்கையில் பெண்கள் பாதிக்கப்படும் வழக்குகளில், அவர்களுக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்கிறது.
- பெண்களுக்கான சட்டங்களில், காலத்திற்கேற்றார் போல, மாறுதல்களை அரசுக்கு பரிந்துரை செய்கிறது.








## நிமிர்ந்து நில்!
## துணிந்து சொல்!












**பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை, நிவர்த்தி சட்டம் 2013-ஐ பயன்படுத்துவதில் பிரச்சனைகள் ஏற்பட்டால் தமிழக மாநில மகளிர் ஆணையத்தை நீங்கள் எந்த நேரமும் அணுகலாம்.**

Email id : **chairscwtn@yahoo.co.in**
Contact no :
**044 - 28551155, 044 - 28592750**

